**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 6 March 2022

# பெண்மையைப் போற்றுவோம்!

*‘எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லைகாண்’ எனும் மகாகவி பாரதியின் வரிகளுக்கு ஏற்ப, இன்று எல்லாத் துறைகளிலும் புதுமை படைத்து, பெண்கள் வெற்றிக்கொடி நாட்டி வருகின்றனர். பொறுமை, தியாகம், துணிச்சல், விடாமுயற்சி என நற்பண்புகள் பல வாய்க்கப் பெற்ற பெண்குலத்தின் பெருமையைப் போற்றும்விதமாக ஆண்டுதோறும் மார்ச் 8ஆம் தேதி அனைத்துலகப் பெண்கள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. நாளை மறுநாள் அந்நன்னாளாக இருக்க, சிங்கப்பூரில் வெவ்வேறு துறைகளில் கோலோச்சிவரும் பெண்கள் சிலரை நேர்கண்டு, அவர்களின் வெற்றிப் பயணத்தையும் பாதையையும் அறிந்து வந்தது தமிழ் முரசு.*

## முன்களப் பணியாளர்களில் முன்மாதிரி



தனக்குப் பிடித்தமான வேலையில் இருப்பதற்கு தன் தாயாரின் பேராதரவே காரணம் எனக் கூறும் திருவாட்டி கங்காதேவி, பெற்றோர்களே பிள்ளைகளின் கனவுகளுக்கு உந்துசக்தியாக விளங்க வேண்டும் என்கிறார். **படம்: உள்துறை அமைச்சு**

சிங்கப்பூர் குடிமைத் தற்காப்புப் படையில் ‘ரோட்டா கமாண்டர்’ அதிகாரியாக பணியாற்றும் 35 வயதான திருமதி கங்காதேவி, இவ்வாண்டு ஜனவரி 29ஆம் தேதி தெலுக் பிளாங்கா ரைஸ் அடுக்குமாடிக் குடியிருப்பில் நிகழ்ந்த பெரும் தீ விபத்தில் தமது குழுவுடன் சேர்ந்து, 45 நிமிடங்களில் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தார்.

அது தமக்குப் பெரும் சவாலாக இருந்தது என்றார் லெஃப்டினன்ட் திருவாட்டி கங்காதேவி.

“ரோட்டா தளபதியாக இருந்த இந்த எட்டு மாதங்களில், அதுவே நான் எதிர்கொண்ட மிகப் பெரிய தீ விபத்து. நான் கடந்த 15 ஆண்டுகளாக தீயணைப்பு அதிகாரியாக பணியாற்றுகிறேன். அப்போது கிட்டிய அனுபவங்களே என்னை அந்த தீச்சம்பவத்தைக் கையாண்டபோது நிலையான மனத்துடன் இருக்க உதவியது.” என்று திருமதி கங்காதேவி கூறினார்.

அந்த அடுக்குமாடிக் குடியிருப்பின் பத்தாவது மாடியில் தீப்பற்றியது. 25 மாடிகள் கொண்ட அக்கட்டடத்தில் இருந்து சம்பவம் நிகழ்ந்தபோது கிட்டத்தட்ட 280 பேர் வெளியேற்றப்பட்டனர்.

தீயை அணைக்கப் போராடிய திருவாட்டி கங்காதேவி, தம் வாழ்க்கையில் முதன்முறையாக சமையலறையில் இருந்து நீல நிறத் தீச்சுடரையும் வசிப்பறையில் இருந்து செம்மஞ்சள் நிறத் தீச்சுடரையும் ஒரே இடத்தில் கண்டார். அது இவருக்குப் பெரும் வியப்பளிப்பதாக இருந்தது.

“தீயை அணைத்தபொழுது தாங்க முடியாத அளவிற்கு அனலடித்தது. ஆயினும், என் முழுக் கவனமும் தீயை அணைப்பதிலும் சக தீயணைப்பு வீரர்களின் பாதுகாப்பிலுமே இருந்தது,” என்றார் இவர்.

வேலையையும் தம் பிள்ளைகளையும் கவனமாகப் பார்த்துக்கொள்வதே தம் வாழ்க்கையின் மிகச் சவாலான விஷயம் என்றார் திருவாட்டி கங்காதேவி.

ஆனாலும், தம் கணவரின் ஆதரவால் பிள்ளைகளையும் வேலைகளையும் சமாளிக்க முடிவதாக இவர் சொன்னார்.

தமது 10வது வயதில் அடுக்குமாடிக் குடியிருப்பின் கீழே விளையாடிக்கொண்டு இருந்தபோது, மூதாட்டி ஒருவர் வழுக்கி விழுந்து அலறியதைக் கேட்டார். உடனே ஓடிச் சென்று உதவி செய்த திருவாட்டி கங்காதேவிக்கு அம்மூதாட்டி நன்றி தெரிவித்தார். அதுவே, சமூகத்திற்குத் தொண்டாற்ற வேண்டும் என்ற எண்ணத்தைத் தமக்குள் விதைத்ததாக இவர் நினைவு கூர்ந்தார்.

இவருடைய தாயாரின் சமூக சேவைகள், அந்த எண்ணத்தை வேரூன்றச் செய்தது

“என் தாயாரே எனக்கு முன்மாதிரி. அவரது அளவுகடந்த அன்புதான் என்னை ஒரு சிறந்த மனிதனாக, இந்த சமூகத்திற்குச் சேவை செய்ய ஊக்குவிக்கிறது. நான் படிப்பை முடித்த பிறகு, அவர்தான் என்னை தீயணைப்புப் படைவீரராக சேரச் சொன்னார். இன்றைய எனது நிலைக்கு அவரே காரணம்,” என்று அன்னையைப் போற்றினார் திருவாட்டி கங்காதேவி.

சிங்கப்பூரில் முன்களப் பணியாளர்களில் ஆண்களைக் காட்டிலும் பெண்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. இதனால், பெண்கள் அதிக அளவில் முன்களப் பணியாளர்களாக முன்வர வேண்டும் என்று இவர் கேட்டுக்கொண்டார்.



## தாதியாக வித்திட்ட சிறுவயது அனுபவம்

இப்போது தாதியாக வேலைசெய்யும் குமாரி வி. நந்தினியின் மனம் முழுதும் பள்ளிப்பருவத்தில் தன் தங்கையுடன் மருத்துவமனையில் நேரங்கழித்த நினைவுகளே நிறைந்துள்ளன. தன் மாற்றுத்திறனாளி தங்கையை அப்போது மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வது இவரது வழக்கம். அப்போது, தங்களைக் கண்ணுங்கருத்துமாகக் கவனித்துக் கொண்ட தாதியரின் வழியே தன்வழியாகவும் இருக்கும் என்று அப்போது இவர் நினைத்ததில்லை. “உடற்குறையுள்ள என் தங்கையுடன் வளர்ந்ததால் பொறுமை, தியாகம் முதலிய குணங்களின் முக்கியத்துவத்தை அறிந்துகொண்டேன். இப்போது எனது பராமரிப்பில் இருப்பவர்களையும் என் குடும்பத்தார் போலவே கவனித்து வருகிறேன்,” என்றார் கூ தெக் புவாட் மருத்துவமனையில் மூத்த தாதியாகப் பணியாற்றி வரும் 30 வயதான நந்தினி. தற்போது இவர் நன்யாங் பலதுறைத் தொழிற்கல்லூரியில் பகுதி நேரமாக மேற்கல்வி பயின்று வருகிறார், எதிர்காலத்தில் துறை சார்ந்து மேலும் கற்று, பலதரப்பு மக்களுக்கும் உதவுவதே இவரது நோக்கம். **படம்: கூ தெக் புவாட் மருத்துவமனை**



## அஞ்சினால் கற்றுக்கொள்ள முடியாது

எந்த வேலையைச் செய்தாலும், துணிந்து இறங்கி, வேலையை முடிக்க வேண்டும் என்கிறார் ‘பேபால்’ நிறுவனத்தில் மென்பொருள் பொறியாளராகப் பணிபுரியும் குமாரி கங்காதேவி பாலகிருஷ்ணன், 29. “தவறுகள் செய்ய அஞ்சக்கூடாது. அஞ்சினால் தவறுகளிலிருந்து பாடம் கற்றுக்கொள்ள முடியாது. அச்சத்துடன் வேலை செய்தால் நமது திறமைகளைப் பற்றி நமக்கே தெரியாமல் போய்விடும்,” என்கிறார் குமாரி கங்கா. தமது துறையில் பெண்களைவிட ஆண்கள் அதிகமாக இருந்தாலும் பெண் என்ற பாகுபாடு இல்லாமல் வேலையிடத்தில் நல்ல வரவேற்பு கிட்டியதாகக் கூறினார் இவர். மற்ற பெண்களையும் தமது துறைக்கு வர இவர் ஊக்குவிக்கிறார். சென்ற ஆண்டு நவம்பரில் ‘டெக் ஃபார் லேடிஸ்’ என்ற பெண்களுக்கான தொழில்நுட்பத் துறை வேலைவாய்ப்புகள் பற்றி தகவல் பகிர்ந்துகொள்ளும் நிகழ்ச்சியில் தம் நிறுவனத்தைப் பிரதிநிதித்து பேசிய குமாரி கங்கா, பெண்கள் பலரும் தமது துறையில் சேர ஆர்வமாக உள்ளதைப் பார்க்கும்போது தமக்கு உற்சாகமாக இருந்தது என்றார். **கோப்புப்படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

## வீட்டிலிருந்தே பாலின சமத்துவம்

விஞ்ஞானி ஒருவரை வரையும்படி சிறார்களிடம் சொன்னால் பெரும்பாலும் அவர்கள் ஆண்களைத் தான் வரைவர். “யாரும் பெண்களையோ சிறுபான்மையினரையோ விஞ்ஞானிகளாக வரைவதில்லை,” என்கிறார் பெண் அறிவியலாளர் நளினி புண்ணியமூர்த்தி, 38. ஆண்களின் ஆதிக்கம் வலுவாக உள்ள அறிவியல் துறையில் உச்சத்தைத் தொட விரும்பும் பெண்கள் கூடுதல் மனஉறுதியுடன் உழைக்க வேண்டியுள்ளதாக தேசிய பல்கலைக்கழகத்தின் பரிணாம வளர்ச்சித் துறையில் பணியாற்றும் துணைப் பேராசிரியர் நளினி கூறினார். “ஆண்களைக் காட்டிலும் பெண்களின் அதிகாரம் அதிக அளவில் கேள்விக்குள்ளாவதை ஆஸ்திரேலிய அறிவியல் சஞ்சிகை ஒன்றில் வெளியாகியுள்ள ஓர் ஆய்வுக்கட்டுரை கூறுகிறது,” என்று திருவாட்டி நளினி குறிப்பிட்டார். பாலின சமத்துவம் வீட்டிலேயே தொடங்கவேண்டும் என உறுதியாக நம்புவதாகக் கூறிய இவர், ஆர்வத்துடன் தொடர்ந்து கேள்விகளைக் கேட்டு, உற்சாகத்துடன் விடை தேடும்படி பெண்களை ஊக்குவிக்கிறார். **கோப்புப்படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**



## ஓவியங்கள்வழி சூழல் விழிப்புணர்வு

நரம்பியல் மருத்துவ வல்லுநராக இருந்தாலும் சுற்றுச்சூழல் மாசுபாடு மனிதனின் வளர்ச்சியை எந்த அளவு பாதிக்கிறது என்பதை ஓவியங்கள் வழியாக உணர்த்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் திருவாட்டி ரூப்ஷி மித்ரா, 47. “என் தந்தை ஓவியத்தின்மேல் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அவரைப் பார்த்து வளர்ந்ததால் எனக்கும் ஓவியக் கலையின்பால் ஆர்வம் பிறந்தது. நான் இந்தியாவின் கோல்கத்தா நகரில் வளர்ந்தவள். அக்காலச் சூழலில் பெண்களை அதிகம் படிக்க விடமாட்டார்கள். ஆனாலும், நான் விரும்பியதைச் செய்ய என் பெற்றோர் ஆதரவாக இருந்தனர். நான் சிறந்த விஞ்ஞானியாக உருவெடுக்க அவர்களே காரணம்,” என்றார் மருத்துவர் ரூப்ஷி. ‘ஸ்டெம்’ எனப்படும் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதவியல் துறையில் இப்போது அதிகமான பெண்கள் பணியாற்ற வருவதாகக் கூறும் இவர், அது இன்னும் அதிகரிக்க வேண்டும் என்றும் அத்துறையில் ஆண்களும் பெண்களும் சம விகிதத்தில் இருக்க வேண்டும் என்றும் விரும்புகிறார். **படம்: திமத்தி டேவிட்**



Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.